بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 30

ஆசிரியர் முஸ்லஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

01 துல்ஹஜ்ஜா 1441 ஹிஜ்ரி கமரி 23 வஃபா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
23 ஜூலை 2020


## அல்லாஹ்வின் கட்டளை

يُرِيْدُ اللّٰهُ لِيُبَيِّنَ لَكُمْ وَيَهْدِيَكُمْ سُنَنَ الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ وَيَتُوْبَ عَلَيْكُمْ ۗ وَاللّٰهُ عَلِيْمٌ حَكِيْمٌ

உங்களுக்கு முன்(னர் சென்று) உள்ளவர்களின் நடைமுறைகளை உங்களுக்கு விளக்கிக் காட்டவும் (அவர்களின் பால்) உங்களுக்கு வழிகாட்டவும், அல்லாஹ் விரும்புகின்றான். அல்லாஹ் நன்கறிந்தவனும், நுண்ணறிவுடையோனுமாவான். (4:27)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**(இக்ரிமா) எத்தகைய நல்லொழுக்கத்தை ஏற்படுத்தினார் என்றால் அவரிடம் தீய ஒழுக்கத்தின் பெயரே எஞ்சியிருக்கவில்லை. மாறாக, அவர்களிடம் பணிவு, எளிமை ஏற்பட்டது. மேலும் அந்த பணிவானது இஸ்லாத்தின் அத்தாட்சியாக திகழ்ந்தது. மேலும் இஸ்லாத்தின் உண்மைக்கு ஒரு சான்றாக இருந்தது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### அமைப்பின் மகத்துவம் மற்றும் கண்ணியத்தை கருத்தில் கொள்ளுங்கள்

நான் இந்த விஷயத்தை வெளிப்படையாக கூறுகின்றேன். அதாவது நான் எந்த விஷயங்களை உங்களுக்கு கூறுகின்றேனோ அதனால் எனக்கு நற்கூலி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கூறவில்லை. நான் எனது ஆன்மாவில் எல்லையற்ற ஆர்வம் மற்றும் வேதனையை உணர்கின்றேன். இத்தகைய ஆர்வம் ஏன் ஏற்பட்டுள்ளது என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் இந்த ஆர்வம் எப்படிப்பட்டதென்றால் நான் அதனை தடுக்க முடியாது என்பதில் கடுகளவு கூட சந்தேகமில்லை.

எனவே நீங்கள் இந்த கூற்றுக்களை எத்தகைய நபரின் உயிலாக கருத வேண்டுமென்றால், மீண்டும் இதனைப் பெறுவதற்கு பாக்கியம் கிடைக்காது. மேலும் அதனை எவ்வாறு பேணி நடக்க வேண்டும் என்றால் ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும்.

மேலும் எவர்கள் நம்மை விட்டு தொலைவில் இருக்கின்றார்களோ அவர்களுக்கும் உங்களது செயல்கள் மற்றும் கூற்றுக்களின் மூலமாக புரிய வையுங்கள். இந்த விஷயம் இல்லையென்றால், மேலும் செயல்களின் அவசியம் இல்லையென்றால் பிறகு இங்கு வந்ததன் நோக்கம் என்ன? என்பதை எனக்குக் கூறுங்கள்.

நான் மறைமுகமான மாற்றத்தை விரும்பவில்லை. மாறாக, வெளிப்படையான மாற்றத்தை எதிர்பார்க்கின்றேன். அதன் மூலம் எதிரி வெட்கப்பட வேண்டும். மேலும் மக்களின் உள்ளங்களில், இந்த எதிரி வழிகேட்டில் இருக்கின்றார் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் பெரிய பெரிய தீயவர்களும் கூட வந்து பைஅத் செய்தார்கள். அது ஏன்? சஹாபாக்களிடம் ஏற்பட்ட வியக்கத்தக்க மாற்றங்களானது அவர்களை வெட்கத்திற்கு ஆளாக்கியது.

### இக்ரிமாவின் தூய முன்மாதிரி

இக்ரிமாவின் நிலையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். உஹது நாளன்று ஏற்பட்ட துன்பத்திற்கு அவரே காரணமாக இருந்தார். அவரது தந்தை அபூஜஹில் ஆவான். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் முன்மாதிரியானது அவர்களை வெட்கத்திற்குள்ளாக்கியது. எனது மார்க்கம் என்னவென்றால், சஹாபாக்களின் முன்மாதிரிகள் மற்றும் மாற்றங்களானது மக்களிடம் வியப்பை ஏற்படுத்தியதுபோன்று அற்புதங்கள் அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மக்கள், நமது உறவினர் எங்கிருந்து எங்கு சென்று விட்டார் என்பதைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர். இறுதியில் அவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்பவர்களாகவே கருதினர்.

இக்ரிமா ஒரு நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பின் மீது தாக்குதல் தொடுத்தார். மற்றொரு நேரத்தில் காஃபிர்களின் படையை சிதறடிக்கச் செய்து விட்டார்.


ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் சஹாபாக்கள் எத்தகைய தூய முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினார்களோ, நம்மால் இன்று மிகவும் பெருமிதத்துடன் அதனை ஆதாரமாகவும், அத்தாட்சியாகவும் எடுத்துக் கூற முடியும்.

இக்ரிமாவின் முன்மாதிரியையே பாருங்கள். இணை வைப்பின் நாட்களில் இணை வைத்து வந்தார். மேலும் தன்னிடத்தில் தீய இயல்புகளைக் கொண்டிருந்தார். மேலும் இஸ்லாத்தை உலகத்திலிருந்தே அழித்து விட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இறைவனது அருளானது அவரை பாதுகாத்தது. எனவே அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எனவே எத்தகைய நல்லொழுக்கத்தை ஏற்படுத்தினார் என்றால் அவரிடம் தீய ஒழுக்கத்தின் பெயரே எஞ்சியிருக்கவில்லை. மாறாக, அவர்களிடம் பணிவு, எளிமை ஏற்பட்டது. மேலும் அந்த பணிவானது இஸ்லாத்தின் அத்தாட்சியாக திகழ்ந்தது. மேலும் இஸ்லாத்தின் உண்மைக்கு ஒரு சான்றாக இருந்தது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


O.A. NIJAM 99947 57172　　V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அந்த ஆரம்பகால சஹாபாக்களின் தியாகங்கள் மிக அதிகமாக இருந்தன. அதனுடன் போட்டி போடவே முடியாது**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களைப் பற்றி, அவர் முஸ்லிம்களுடைய தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்று கூறினார்கள். மேலும், அப்துர் ரஹ்மான் அவர்கள் வானத்திலும் அமீன் (அமானிதத்தை பேணக்கூடியவர்) ஆக இருக்கிறார்; பூமியிலும் அமீன் ஆக இருக்கின்றார் என்று கூறினார்கள்**

**உஹது போரில் மக்களுடைய பாதங்கள் தடுமாறியபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதியான நின்றார்கள்**

**ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு கிடைத்த இன்னொரு நற்பேறு என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கிறார்கள்.**

**...மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நபி உங்களுக்குப் பின்னால் நின்று தொழுவது நீங்கள் நல்லடியார் என்பதை உறுதிப்படுத்துகிறது.**

**சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கப்பட்ட பத்து நபர்களில் ஒருவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியுமான ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டேன். ஓர் ஊரில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்களாகச் செல்லாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும்போது அங்கு கொள்ளைநோய் பரவினால் அதிலிருந்து வெருண்டோடுவதற்காக (அவ்வூரைவிட்டு) வெளியேறாதீர்கள்.**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஜுன் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறி வந்தேன். சில சம்பவங்கள் எஞ்சியிருந்தன. ஆகவே இன்றும் அவர்களைக் குறித்து எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு உமைய்யா பின் கலஃப் என்பவருடன் பழைய நட்பு ரீதியான தொடர்பு இருந்தது. இது குறித்த விளக்கமான சம்பவம் புகாரியில் இடம் பெற்றுள்ளது. அதில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் உமைய்யா பின் கலஃப்–க்கு கடிதம் எழுதினேன். அதாவது மக்காவிலுள்ள எனது செல்வம் மற்றும் சொத்துக்களை அவர் பாதுகாக்க வேண்டும் எனவும் அவருடைய செல்வம் சொத்துக்களை மதீனாவில் நான் பாதுகாப்பேன் என்றும்க கடிதம் எழுதியிருந்தேன். நான் எனது பெயரை அப்துர் ரஹ்மான் என்று எழுதியபோது எனக்கு எந்த அப்துர் ரஹ்மானையும் தெரியாது; ஆகவே அறியாமைக் காலத்தில் இருந்த உங்களுடைய பெயரை கூறுங்கள் என்று உமைய்யா கூறினார். அப்போது நான் அப்தே அம்ர் என்று எனது பெயரை எழுதினேன்.

பத்ர் போர் நடந்த தினத்தில் மக்களெல்லாம் உறங்கிய உடன் அவனைப் பாதுகாப்பதற்காக மலையை நோக்கி நான் சென்றேன். அவனை பிலாலும் பார்த்து விட்டார்கள். பிலால் உடனே வந்து அன்ஸாரிகள் குழுமியிருந்த ஓர் இடத்தை அடைந்து, இதோ உமைய்யா பின் கலஃப்! இவன் தப்பித்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று கூறினார்கள். பிலாலுடன் அன்ஸாரிகளின் ஒரு கூட்டத்தினர் எங்களைத் தொடர்ந்து வந்தனர். அதாவது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) மற்றும் உமைய்யா பின் கலஃப் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர். இவர் அவனைக் காப்பாற்ற சென்றார். அவனுக்கு அடைக்கலம் வழங்க சென்றார்.

அவர்கள் எங்களைப் பிடித்து விடுவார்கள் என்று நான் அஞ்சியபோது உமைய்யாவின் மகனை முன்நிறுத்தி அவர்களின் கவனத்தைத் திருப்ப முயன்றேன். அவர்கள் இவனுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது நான் அவனை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று விடலாம் என்று நினைத்தேன். அவனை அவர்கள் கொன்றனர். பிறகும் எங்களைத் தொடர்ந்து வந்தனர். உமைய்யா உடல் கனத்தவனாக இருந்தான். அதனால் விரைவாக ஓட முடியவில்லை.

அவர்கள் எங்களை அடைந்ததும் உமைய்யாவிடம், உட்காருவீராக என்று கூறினார்கள். அவன் உட்கார்ந்ததும் அவனைக் காப்பாற்றுவதற்காக அவன் மேல் நான் விழுந்தேன். அன்ஸாரிகள் எனக்குக் கீழ்ப்புறம் வாளைச் செலுத்தி அவனைக் கொன்று விட்டனர். அவர்களில் ஒருவரின் வாளால் என் காலும் காயமுற்றது. (சஹீஹுல் புகாரி..... ஹதீஸ் எண் 2301)

தாரீகே திப்ரீ எனும் நூலில் மேற்கொண்டு இதன் விளக்கம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

மக்காவில் உமைய்யா பின் கலஃப் எனது நண்பனாக இருந்தான். அப்போது எனது பெயர் அப்தே அம்ர் என்றிருந்தது. மக்காவிலேயே நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது அப்துர் ரஹ்மான் என்று எனக்கு பெயர் வைக்கப்பட்டது. அதன் பிறகு அங்கு அவன் என்னை சந்திக்கும் போதெல்லாம் என்னைப் பார்த்து, அப்தே அம்ர்! நீ உனது தந்தை வைத்த பெயரிலிருந்து விலகிச் செல்கிறாயா? என்று கேட்பான்.

அதற்கு நான் ஆம் என்று கூறிவேன். எனக்கு எந்த ரஹ்மானையும் தெரியாது. ஆகவே வேறு ஏதேனும் பெயரை தேர்வு செய்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும். அதன் மூலம் நான் உன்னை அழைப்பேன். ஏனென்றால் பழைய பெயரினால் உன்னை

அழைக்கும்போது நீ பதில் கூறுவதில்லை. எந்த விஷயத்தைப் பற்றி நான் அறியாதவனாக இருக்கின்றேனோ அந்த பெயருடன் நான் உன்னை அழைக்க முடியாது என்று கூறுவான்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவன் என்னைப் பார்த்து அம்தே அம்ர் என்று அழைக்கும்போது நான் அவனுக்கு பதில் கூறுவதில்லை. நான் அவனிடம் அபூ அலியே! இவ்விஷயத்தில் நீ என்ன விரும்புகிறாயோ அதையே தேர்வு செய்துகொள் என்று கூறினேன். இந்த பழைய பெயரினால் என்னை அழைத்தால் நான் பதில் சொல்ல மாட்டேன் என்றேன். அதற்கு அவன், அப்படியா! உனது பெயர் அப்தே இலாஹ் என்று சிறந்ததாக இருக்கும் என்று கூறினான். அதற்கு நானும் நல்லது என்று கூறினேன்.

ஆகவே அதன் பிறகு நானும் அவனும் சந்தித்திக் கொள்ளும் போதெல்லாம் அவன் என்னை அப்தே இலாஹ் என்ற பெயரில் அழைப்பான். அதற்கு நான் பதிலளிப்பேன். எதுவரை என்றால் பத்ர் போரின் நாள் வந்தது. நான் உமைய்யாவை கடந்து சென்று கொண்டிருந்தேன். அவன் தனது மகன் அலீ பின் உமைய்யாவின் கைகளை பற்றி பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

எனக்கு கிடைத்த பல போர் கவசங்களை நான் என்னிடத்தில் வைத்திருந்தேன். அதை நான் எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன். அவன் என்னைப் பார்த்து அப்தே அம்ர் என்று அழைத்தான். நான் பதில் ஒன்றும் கூறவில்லை. அப்பொழுது அவன் மீண்டும் என்னை அழைத்து அப்தே இலாஹ் என்று அழைத்தான். நான் என்ன விஷயம்? என்று கேட்டேன்.

அதற்கு அவன் நீ எடுத்துச் செல்லும் இந்த போர் கவசங்களை விட நான் உனக்கு சிறந்தவன் இல்லையா? என்று கேட்டான். அப்படியா! அவ்வாறு என்றால் வாருங்கள் என்று கூறினேன். நான் அந்த போர்க் கவசங்களை அங்கே எறிந்து விட்டேன். அதாவது அவனுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக அவனையும் அவனது மகன் அலியுடைய கையையும் படித்துக் கொண்டேன். அப்பொழுது இன்றைய நாளை போன்று மிக மோசமான நாளை நான் ஒருபோதும் கண்டதில்லை என்று கூறினான்.

எப்படி இருந்தபோதிலும் நான் அந்த இருவரையும் என்னுடன் அழைத்துக் கொண்டு சென்றேன். தந்தை மகனுக்கு இடையில் நடந்தவாறு இருவருடைய கைகளையும் படித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன். உங்களிடத்தில் நெருப்பு கோழியின் இறகை அடையாளமாக வைத்திருக்கும் அந்த நபர் யார் என்று கேட்டான். அவர் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் ஆவார் என்று நான் பதில் கூறினேன். அவரால்தான் எங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. இந்த மோசமான நிலை அவரால்தான் ஏற்பட்டது என்று அவன் கூறினான்.

எவ்வாறிருப்பினும் நான் அந்த இருவரையும் என்னுடன் அழைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன். நான் அவர்களை அழைத்துக் கொண்டு செல்வதை ஹஸ்ரத் பிலால் அவர்கள் பார்த்து விட்டார்கள். மக்காவில் பிலாலுக்கு இந்த உமைய்யா துன்பங்கள் கொடுத்து வந்தான். அவன் இஸ்லாத்தை விட்டு விட வேண்டும் என்பதற்காக மக்காவிலுள்ள பாறையில் அவை சூட்டின் காரணமாக கொதித்துக் கொண்டிருக்கும்போது அவரை கொண்டு செல்வான். கொதிக்கின்ற பாறையின் மீது அவரை கிடத்தி ஒரு பெரிய கல்லை அவரது நெஞ்சின் மீது வைக்கச் சொல்லி கட்டளையிடுவான். அந்தக்கல் அவருடைய நெஞ்சின் மீது வைக்கப்பட்ட பிறகு, நீ முஹம்மதுடைய மார்க்கத்தை விட்டுவிடாத வரை உனக்கு இந்த தண்டனை கிடைத்துக் கொண்டிருக்கும் என்று கூறுவான். ஆனால் இந்த தண்டனைக்குப் பிறகும் பிலால் அவர்கள் அஹது அஹது என்றே கூறுவார்கள். அதாவது இறைவன் ஒருவனே! இறைவன் ஒருவனே! என்று கூறுவார்கள்.

ஆகவே உமைய்யாவை பிலால் அவர்கள் பார்த்தபோது நிராகரிப்பின் தலைவரான உமைய்யா இவனே ஆவான். இவன் தப்பித்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று சப்தமிட்டார். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் பிலாலைப் பார்த்து, பிலாலே! இந்த இருவரும் எனது கைதிகள் என்று கூறினார்கள். மறுபடியும் பிலால் அவர்கள், இவன் தப்பித்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று கூறினார்கள.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் பிலாலைப் பார்த்து, இப்னு சவ்தாவே! உங்களுக்கு காது கேட்கிறதா? என்று கேட்டார்கள். பிலால் அவர்கள் இவன் தப்பித்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று கூறினார்கள். பிறகு பிலால் மிக உரத்த குரலில், அல்லாஹ்வின் அன்சாரிகளே! கஃபிர்களின் தலைவன் உமைய்யா பின் கலஃப் இவன்தான். இவன் தப்பித்து விட்டால் நான் அழிந்து போய் விடுவேன் என்று கூறினார்கள்.

அவருடைய குரலை கேட்டு மக்கள் நாலாபுறமும் எங்களை சுற்றி வளைத்து விட்டார்கள். நான் அவனை காப்பாற்ற முயற்சி செய்தேன். ஒருவர் அவனது மகனின் மீது வாளை சுழற்றினார். அவன் அங்கேயே விழுந்து விட்டான். அப்போது உமைய்யா எந்தளவு சத்தமாக அலறினான் என்றால் அதுபோன்ற சப்தத்தை நான் ஒருபோதும் கேட்டதில்லை. அவனைப் பார்த்து தப்பி ஓடி விடு என் கூறினேன். ஆனால் அவனால் தப்பித்து செல்ல முடியவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உனக்கு உதவ முடியாது என்று நான் கூறினேன்.

அப்பொழுது தாக்குதல் நடத்தியவர்கள் அவ்விருவரின் மீது தமது வாளை கொண்டு தாக்குதல் தொடுத்தார்கள். அந்த இருவருடைய கதையையும் அங்கேயே முடித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்ததுண்டு. அதாவது அல்லாஹ் பிலாலின் மீது கருணை காட்டுவானாக. எனது போர் கவசங்களும் போய்விட்டன. கைதியை அவர்கள் என்னிடம் இருந்து வலுக்கட்டாயமாக பறித்து விட்டார்கள் என்று கூறுவார்கள்.

(தாரீக் திப்ரீ தொகுதி 2 பக்கம் 35 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் உஹது போரில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் மக்களுடைய பாதங்கள் தடுமாறியபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதியான நின்றார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(நம்பிக்கை கொண்டவர்களே) உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கேற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வங்கொண்டவராயும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவராயும் அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராயுமிருக்கின்றார். (9:128)

Faizal Hameed Ilahi, Tittacherry

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 95 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போரில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு 21 காயங்கள் ஏற்பட்டன. காலில் எந்த அளவு காயம் ஏற்பட்டது என்றால் அன்னார் நொண்டி நடப்பார்கள். அன்னாருடைய இரண்டு முன் பற்களும் ஷஹீது ஆகிவிட்டன.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 476 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு உமர் அறிவிக்கின்றார்கள்: ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமையில் 700 படை வீரர்களுடன் தவ்மதுல் ஜன்தல் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் தனது அருளுக்குரிய கரங்களால் கருப்பு நிற தலைப்பாகை அவர்களுக்கு கட்டி விட்டார்கள். அந்த தலைப்பாகை துணியின் நுனி அவருடைய தோள்களுக்கு இடையில் தலையில் வைத்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், அபூ முஹம்மதே! தவ்மதுல் ஜன்தலிலிருந்து எனக்கு கவலை அளிக்கக்கூடிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக அங்கு படை ஒன்று திரட்டப்பட்டு வருகிறது. ஆகவே நீங்கள் அல்லாஹ்வுடைய வழியில் ஜிஹாது செய்வதற்காக அங்கு செல்லுங்கள். 700 படை வீரர்கள் உங்களுடன் செல்வார்கள். தவ்மதுல் ஜன்தல் சென்ற பிறகு அங்குள்ள தலைவர் மற்றும் அந்த கல்பு கோத்திரத்தின் மக்களுக்கு முதலில் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள்.

ஆனால் போருக்கான நிலை ஏற்பட்டுவிட்டால் எவரையும் ஏமாற்றக்கூடாது. மோசடி மற்றும் வாக்கு மீறல் செய்யக்கூடாது. குழந்தைகள் மற்றும் பெண்களை கொலை செய்யக்கூடாது. மேலும் இறைவனுடைய கிளர்ச்சியாளர்களிடமிருந்து உலகை தூய்மை செய்வீராக. இந்த முன்னெச்சரிக்கையுடன் போர் செய்ய அனுமதி உள்ளது என்று கூறினார்கள்.

ஆகவே ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தவ்மதுல் ஜன்தல் சென்றடைந்த பிறகு மூன்று நாட்கள் வரை அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தாக்ரள். அவர்கள் மூன்று நாட்களும் மறுத்து வந்தார்கள். பிறகு அவர்களது தலைவனாக இருந்த கிறிஸ்தவனாக அஸ்பக் பின் அம்ர் கல்பீ என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எல்லா விவரங்களையும் எழுதினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தலைவருடைய மகளான துமாஸிர் என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ளுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அப்பெண்ணுடன் திருமணம் செய்தார்கள். மேலும் அப்பெண்ணுடன் அவர்கள் மதீனாவுக்கு திரும்பினார்கள். துமாஸிர் என்ற இப்பெண்தான் பிற்காலத்தில் உம்மு சல்மா என்று அழைக்கப்பட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 96 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 106)

உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் ஜிஸ்ர் போர் நடைபெற்றபோது ஹஸ்ரத் உபைது பின் மஸ்வூத் அவர்கள் ஷஹீதான செய்தி ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு கிடைத்தது. ஜிஸ்ர் போரைப் பற்றி இதற்கு முன்பு கூறப்பட்டது. பாரசீகர்களின் ஒரு யானை அவர்களை மிதித்து நசுக்கி விட்டது. எப்படி இருந்தபோதிலும் பாரசீகர்கள் கிஸ்ராவிலிருந்து ஒருவரை தேடிப் பிடித்து தனது அரசனாக ஆக்கிக் கொண்ட இந்த செய்தி கிடைத்தவுடன், ஹஸ்ரத் உமர் அவர்கள் முஹாஜிரீன்களையும், அன்ஸாரையும் போருக்காக அழைத்தார்கள்.

மதீனாவில் இருந்து கிளம்பிச் சென்று சிரார் என்ற இடத்தில் முகாமிட்டார்கள். சிரார் என்பது மதீனாவில் உள்ள ஒரு மலையின் பெயராகும். மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் ஈராக்கிற்கு செல்லும் வழிப்பாதையில் இந்த இடம் உள்ளது. அவர்கள் அங்கு முகாமிட்டபோது ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களை அஃஹ்ஃபஸ் என்ற இடத்தை அடையுமாறு முன்னால் அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் படையுடைய வலப்பக்கத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களையும் இடப்பக்கத்தில் ஸுபைர் பின் அவாம் அவர்களையும் நியமித்தார்கள். மேலும் தனது பிரதிநிதியாக மதீனாவில் ஹஸ்ரத் அலி அவர்களை நியமித்து கிளம்பி வந்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் மக்களிடத்தில் ஆலோசனை கேட்டார்கள். அனைவரும் ஹஸ்ரத் உமர் பாரசீகம் செல்ல வேண்டும் என்று ஆலோசனை கொடுத்தார்கள். இந்த படை கிளம்பி சிரார் என்ற இடத்தை அடையும்வரை ஹஸ்ரத் உமர் அவர்கள் எவரிடமும் ஆலோசனை கேட்கவில்லை.

இந்த இடத்திற்கு வந்த பிறகு ஆலோசனை கேட்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் திரும்பி வந்தபோது அவர்களும் அந்த மக்களுடைய ஆலோசனையை ஆமோதித்தார்கள். இதற்கு முன்பு ஹஸ்ரத் தல்ஹா அங்கு இல்லை. அவர் திரும்பி வந்தபோது, அவரும் நீங்கள் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களை முன்னேறிச் செல்லக்கூடாது என்று தடுத்த மக்களில் ஒருவராக இருந்தார்கள். ஏன் செல்லக்கூடாது என்ற காரணத்தையும் அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இன்றைய நாளுக்கு முன்பு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தவிர வேறு எவர் மீதும் எனது தாய் தந்தையரை அர்ப்பணம் என்று கூறியது கிடையாது. இன்றைய நாளுக்கு பிறகும் நான் ஒருபோதும் அவ்வாறு கூற மாட்டேன். ஆனால் இன்று நான் கூறுகிறேன்; உங்கள் மீது எனது தாய் தந்தையார் அர்ப்பணமாகட்டும். இந்த விவகாரத்தினுடைய இறுதி முடிவை என்னிடத்தில் நீங்கள் விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். அப்போது கலீஃபாக இருந்த ஹஸ்ரத் உமர் அவர்களைப் பார்த்து ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக உங்கள் இறைவன் வானங்களையும், பூமியையும் ஆறு காலக்கட்டங்களில் படைத்த அல்லாஹ்வேயாவான். பின்னர் அவன் அரியணையில் உறுதியாக நிலைகொண்டு எல்லாவற்றிற்கான ஏற்பாட்டையும் செய்கின்றான். அவனது அனுமதியின்றிப் பரிந்து பேசுபவர் எவருமில்லை. இத்தகு அல்லாஹ்(தான்), உங்கள் இறைவனாவான். எனவே நீங்கள் அவனையே வணங்குங்கள். (10:4)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

நீங்கள் இங்கேயே அதாவது சிரார் என்ற இடத்திலேயே நீங்கள் நின்று விடுங்கள். ஒரு மிகப்பெரும் படையை நீங்கள் அனுப்பி வையுங்கள். ஆரம்பத்திலிருந்து இப்போது வரை உங்களுடைய படை குறித்து அல்லாஹ்வுடைய தீர்மானம் எவ்வாறு உள்ளது என்பதை நீங்கள் கண்டு வருகிறீர்கள். உங்களுடைய படை தோல்வி கண்டு விட்டால் அது நீங்கள் தோற்றதுபோல் ஆகாது. ஆனால் ஆரம்பத்திலேயே நீங்கள் கொலை செய்யப்பட்டு விட்டால் அதாவது அவர்கள் அதற்கான காரணத்தை எடுத்து வைத்தார்கள். தோல்வி அடைந்து விட்டால் பிறகு முஸ்லிம்கள் ஒருபோதும் தக்பீர் கூற முடியாது. லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற சாட்சியத்தை ஒருபோதும் அவர்களால் கூற முடியாது போய்விடும்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் இந்த அனைத்து விஷயத்தையும் பேசிக் கொண்டிருககும்போது ஹஸ்ரத் உமர் அவர்கள் இந்தப் படைக்கு யாரை கமாண்டராக நியமிப்பது என்று தேடிக் கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் ஹஸ்ரத் உமர் அவர்களிடத்தில் ஹஸ்ரத் சஅது அவர்களுடைய கடிதம் வந்தது. ஹஸ்ரத் சஅது அவர்கள் அந்நேரத்தில் சதகா வசூலிப்பதற்காக நஜதில் நியமிக்கப்பட்டிருந்தார். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுடைய விஷயங்களை கேட்ட பிறகு யாரை கமாண்டராக ஆக்குவது? யாரிடம் பொறுப்பை ஒப்படைப்பது? என்று நீங்களே செல்லுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் உங்களுக்கு ஆள் கிடைத்து விட்டது என்று கூறினார்கள். அந்த நபர் யார் என்று உமர் அவர்கள் கேட்டார்கள். (கடற்கரை சிங்கமான) சஅது பின் மாலிக்தான் அந்த நபர் ஆவார் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள். அதாவது இவர் மிகவும் தைரியசாலி, மிக நல்ல கமாண்டர் ஆவார். அவரை கமாண்டராக ஆக்கி அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். மற்ற மக்களும் இந்த ஆலோசனையை ஆமோதித்தார்கள். இந்த சம்பவமும் தாரீகே திப்ரீயிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

(தாரீகே திப்ரீ தொகுதி 3 பக்கம் 381,382 – 1987 ஆம் ஆண்டுபைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 287 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் பல்வேறு கோத்திரங்கள் மற்றும் சஹாபாக்கள் தங்குவதற்கு இடம் வழங்கினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுடைய கோத்திரத்திற்கு மஸ்ஜிது நபவிக்கு அருகில் உள்ள பேரீத்த பழ தோட்டத்தில் நிலம் அளித்தார்கள். பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய குடும்பத்திலிருந்து இந்த சொத்துக்களை ஹஸ்ரத் ஸுபைர் அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடத்தில் இந்த வாக்குறுதியையும் வழங்கியிருந்தார்கள். அதாவது அல்லாஹ் முஸ்லிம்களுடைய கையினால் சிரியாவை வெற்றி கொள்ளச் செய்யும்போது உங்களுக்கு இந்த பகுதியில் நிலம் கெடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களுடைய காலகட்டத்தில் சிரியா நாட்டில் இஸ்லாத்திற்கு வெற்றிகள் கிடைத்தபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு அவருடைய நிலம் கொடுக்கப்பட்டது. அந்த பகுதியின் பெயர் சலீல் என்பதாகும். அங்குதான் அவருக்கு நிலம் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 105,106)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு கிடைத்த இன்னொரு நற்பேறு என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் அவருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் முகீரா அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தபூக் போரில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் முகீரா அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலைக்கடன் கழிப்பதற்காக ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பாக சென்றார்கள். நான் தண்ணீர் குவளை எடுத்துச் சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை நோக்கி திரும்பி வரும்போது நான் தூரத்தில் நின்று கொண்டிருந்தேன். என்னிடத்தில் வந்த பிறகு நான் அந்த தூரத்தில் நின்று கொண்டிருந்தேன். என்னிடத்தில் வந்த பிறகு நான் அந்த தண்ணீர் குவளையில் இருந்து அன்னாருடைய கைகளில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அன்னார் தமது இரண்டு கைகளையும் மூன்று முறை கழுவினார்கள். பிறகு தமது முகத்தை கழுவினார்கள். பிறகு அங்கியின் கைப்பகுதிகள் வழியாக தம் கைகளை வெளியே எடுக்கலானார்கள். அப்பகுதிகள் மிகவும் இறுக்கமாக இருந்தன.

எனவே கீழ்ப்பகுதி வழியாக இரண்டு கைகளையும் வெளியே எடுத்தார்கள். பிறகு கை முட்டு வரை கழுவினார்கள். பிறகு அன்னார் தமது காலுறைகளின் மீது தடவி அதை சுத்தப்படுத்தினார்கள். அதன் பிறகு நடக்க ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் முகீரா அவர்கள் கூறுகிறார்கள்: நானும் அன்னாருடன் நடக்க ஆரம்பித்தேன். எதுவரை என்றால் நங்கள் மக்களை கண்டோம். அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை தொழுகைக்காக முன்னிறுத்தி இருந்தார்கள். அவர் மக்களுக்கு தொழ வைத்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இரண்டு ரக்அத்தில் ஒன்று கிடைத்தது. அதாவது அப்பொழுது ஃபஜ்ர் தொழுகையின் ஒரு ரக்அத் முடிந்து விட்டிருந்தது. இரண்டாவது ரக்அத் கிடைத்தது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுடன் சேர்ந்து இரண்டாவது ரக்அத்தை தொழுவதற்கு வரிசையில் நின்றார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் சலாம் கொடுத்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தொழுகையை முழுமை செய்வதற்காக எழுந்து நின்றார்கள்.

அதாவது இன்னொரு ரக்அத்தை தொழுவதற்காக நின்றார்கள். இதைக்கண்ட முஸ்லிம்களிடத்தில் அச்சம் தொற்றிக் கொண்டது.

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒரு மனிதனுக்கு ஏதாவதொருப் பெருந்துன்பம் ஏற்படும்போது அவன் ஒருக்கணித்து(ப் படுத்து)க் கொண்டோ, உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ நம்மை அழைக்கின்றான். பின்னர் நாம் அவனது துன்பத்தை அவனை விட்டும் நீக்கினால் அவனுக்கு ஏற்பட்ட எந்த (ஒரு) துன்பத்தி(னை அகற்றுவத)ற்காகவும் அவன் நம்மை ஒருபோதும் அழைத்திராததைப் போன்று சென்று விடுகின்றான். இவ்வாறே வரம்பு மீறி நடப்பவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருப்பவை அழகுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. (10:13)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

அவர்கள் அதிகமதிகமாக தஸ்பீஹ் கூறத்தொடங்கினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தொழுகையை நிறைவு செய்த பின்பு மக்களை பார்த்து நீங்கள் செய்தது சரிதான்! என்றோ அல்லது நீங்கள் நல்லதை செய்தீர்கள் என்றோ கூறினார்கள். அதாவது தொழுகையை அதன் குறித்த நேரத்தில் தொழுததன் காரணமாக நல்லது செய்தீர்கள் என அது குறித்து பெருமை கொண்டார்கள்.

ஹஸ்ரத் முகீரா கூறுகின்றார்கள்: நாங்கள் சென்றடைந்தபோது அப்துர் ரஹ்மான் அவர்களை பின்னால் நிறுத்த நான் விரும்பினேன். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்று செய்ய வேண்டாம்; அவரை தொழ வைக்க விடுங்கள் என்று கூறினார்கள். தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒவ்வொரு நபியும் தமது வாழ்வில் சமுதாயத்தின் ஏதேனும் ஒரு நல்ல நபருக்கு பின்னால் கண்டிப்பாக தொழுகிறார் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 95 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் சலாத்.... ஹதீஸ் எண் 274)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு இன்னொரு மிகப்பெரும் பெருமையையும் வழங்கினார்கள். தொழ வைத்தது மிக நல்ல விஷயம் என்று மட்டும் கூறவில்லை. மாறாக நான் உங்களுக்குப் பின்னால் நின்று தொழுதது நீங்கள் நல்லடியார் என்பதையும் உறுதிப்படுத்துகிறது என்றும் கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் லுஹருக்கு முன்பு நீண்ட தொழுகையை தொழுது வந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது நஃபில் தொழுது வந்தார்கள். பாங்கு கேட்டவுடன் உடனடியாக தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வந்துவிடுவார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 107)

இன்னொரு அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கஅபாவை சுற்றி வருவதைக் கண்டேன். அவர்கள், அல்லாஹ்வே! உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து என்னை காப்பாற்றுவாயாக என்று துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 110)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அறிவிக்கிறார்கள்: எந்த வருடத்தில் ஹஸ்ரத் உமர் அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த வருடத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை அன்னார் ஹஜ்ஜுடைய அமீராக நியமித்தார்கள்.

(தாரீகே திப்ரீ தொகுதி 3 பக்கம் 379,380 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ சல்மா பின் அப்துர் ரஹ்மான் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் பேன் தொல்லையைக் குறித்து முறையிட்டார்கள். யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் பட்டாடை அணிவதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். அப்போது ஏதேனும் ஒரு காரணத்தினால் பேன் தொல்லை உருவாகிவிட்டது. ஒருவேளை தலையில் உருவாகியிருக்கலாம். அது குணமாகாமல் இருந்திருக்கலாம். அந்நேரத்தில் அவர்கள் பட்டாடை அணிய அனுமதி வாங்கினார்கள். பட்டாடை அணிவதால் சிறிது பாதுகாப்பு ஏற்படுகிறது என்று கூறியிருக்கலாம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு பட்டாடை அணிவதற்கு அனுமதி வழங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இறந்த பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் கிலாஃபத்தில் அமர்ந்தபோது ஹஸ்ரத் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் தனது மகனான அபூ சல்மா உடன் ஹஸ்ரத் உமர் அவர்களிடத்தில் வந்தார்கள். அபூ சல்மா அவர்கள் பட்டு மேலாடை அணிந்திருந்தார்கள். நீங்கள் என்ன அணிந்துள்ளீர்கள் என்று கேட்டவாறு அபூ சல்மாவுடைய மேலாடையை பிடித்து கிழித்தெறிந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், ஹஸ்ரத் உமர் அவர்களைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கியது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள். அதற்கு உமர் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேன் தொல்லையை குறித்து நீங்கள் முறையிட்ட காரணத்தால் உங்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறார்கள். இந்த அனுமதி உங்களைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 96 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅது பின் இப்ராஹீம் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஒரு போர்வையை அணிந்து வந்தார்கள். அல்லது ஏதேனும் நேரத்தில் ஒரு போர்வையை அணிந்திருக்கலாம். அனுடைய விலை 400 அல்லது 500 திர்ஹமாக இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 97 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது எவ்வாறான நிலை வந்தது என்றால் மிக விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து வந்தார்கள். அல்லாஹ்வுடைய அருளைப் பாருங்கள். ஹிஜ்ரத் செய்தபோது ஒன்றுமே இல்லை. ஆனால் அதற்குப் பிறகு விலை உயர்ந்த ஆடைகளையும் அணிந்தார்கள். எண்ணிக்கையிலடங்கா சொத்துக்களையும் அல்லாஹ் அவர்களுக்காக உருவாக்கினான்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் தனது மரணத்தருவாயில் ஹஸ்ரத் உமர் அவர்களை தமக்குப் பிறகு கலீஃபாவாக நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இது குறித்து தீர்மானம் செய்தபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை அழைத்தார்கள். அவர்களிடத்தில் உமர் குறித்து உங்களது கருத்து என்ன? என்று கேட்டார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

ஒவ்வொரு வருடமும் ஒரு முறை அல்லது இரு முறை அவர்கள் சோதனைக்கு உள்ளாவதை அவர்கள் காண்பதில்லையா? ஆயினும் அவர்கள் கழிவிரக்கம் கொள்வதுமில்லை; அறிவுரையினைப் பெறுவதுமில்லை. (9:126)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அதற்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், திருத்தூதரின் கலீஃபாவே! அவர் மற்றவர்களை காட்டிலும் மேன்மையானவர் ஆவார். ஆனால் அவரது இயல்பில் கொஞ்சம் கடினம் உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் கூறினார்கள்: இந்த கடுமைக்கான காரணம் என்னவென்றால், நான் மிக மென்மையானவன். என்னை மென்மையானவராக அவர் காணும்போது அவர் சற்று கடினமாக இருப்பார். இதன் மூலம் விவகாரம் சமநிலையில் இருப்பதற்கு அவ்வாறு நடந்து கொள்வார். ஆனால் எனக்குப் பிறகு விவகாரம் அவரது பொறுப்பில் வரும்போது இதுபோன்ற அநேக விஷயங்கள் அவர் விட்டு விடுவார். பிறகு அவரிடத்தில் கடுமையை காணமாட்டீர்கள்.

பிறகு கூறினார்கள்: அபூ முஹம்மதே! நான் அவர்களை மிக ஆழமாக கவனித்து வந்துள்ளேன். நான் எப்போதாவது எவரிடமாவது ஏதேனும் விவகாரத்தில் கடும் கோபம் கொண்டால் அப்போது உமர் அவர்கள் அந்த நபரிடத்தில் திருப்தி கொள்ளும்படி உமர் ஆலோசனை கூறுவார்கள். அந்நேரத்தில் மென்மையை கையாளும்படி உமர் ஆலோசனை கூறுவார்கள். மேலும் நான் மென்மையை கையாண்டால் கடுமைகாட்டும்படி ஆலோசனை கூறுவார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், அபூ முஹம்மதே! நான் உம்மிடத்தில் கூறிய விஷயங்களை நீங்கள் பிறரிடத்தில் கூற வேண்டாம் என்றார்கள். அப்படியே ஆகட்டும் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்.

(தாரீகே திப்ரீ தொகுதி 3 பக்கம் 352 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாலாபுறமும் பல்வேறு குழுக்களை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை பனூ ஜுஸைமாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பனூ ஜுஸைமா அறியாமைக் காலத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் தந்தையான அவ்ஃபையும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களின் தந்தையின் சகோதரரான ஃபாக்கிஹ் பின் முகீராவையும் கொலை செய்திருந்தார்கள். அங்கு ஹஸ்ரத் காலித் அவர்கள் தவறாக அந்த கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரை கொலை செய்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயம் தெரியவந்தபோது அன்னார் இதை விரும்பவில்லை. மேலும் இதற்கு தியத் – பரிகாரம் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அனைத்து பொருட்களுக்கான விலையையும் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு ஹஸ்ரத் காலிதின் இந்த செயல் பற்றி தெரிய வந்தபோது அன்னார் அவர்களிடம், உங்களுடைய தந்தையின் சகோதரரை அவர்கள் கொலை செய்து விட்டதால் நீங்கள் அந்த மனிதனை கொன்று விட்டீர்களா? என்று கேட்டார்கள். இதற்கு ஹஸ்ரத் காலித் அவர்கள் கடுமையாக பதிலளித்தவாறு, அவர்கள் உங்களுடைய தந்தையையும் கொன்றிருக்கின்றார்கள்தான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் அவர்களிடம், நீங்கள் இந்த நாளை நீளமாக்க விரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். அதாவது நீங்கள் எமக்கு முன்னால் ஈமான் கொண்டிருப்பதால் இதிலிருந்து நீங்கள் பயன் பெறுகின்றீர்களா? அதற்காக பெருமை கொள்கிறீர்களா? அதனால் என்னிடத்தில் இவ்வாறு கேட்கிறீர்களா? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் அவர்கள் சற்று கோபமுற்ற இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரியவந்தபோது, எனது தோழர்களை விட்டுவிடுங்கள். எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! உங்களில் ஒருவர் உஹது மலை அளவு தங்கத்தை செலவு செய்தாலும் அவர்களுடைய சாதாரண நன்மையை நீங்கள் அடைய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது அந்த மக்களுடைய மிகப்பெரும் அந்தஸ்தாகும்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 479 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 108,109)

அந்த ஆரம்பகால சஹாபாக்களின் தியாகங்கள் மிக அதிகமாக இருந்தன. அதனுடன் போட்டி போடவே முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களைப் பற்றி, அவர் முஸ்லிம்களுடைய தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்று கூறினார்கள். மேலும், அப்துர் ரஹ்மான் அவர்கள் வானத்திலும் அமீன் (அமானிதத்தை பேணக்கூடியவர்) ஆக இருக்கிறார்; பூமியிலும் அமீன் ஆக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 846 – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஒரு முறை எந்த அளவுக்கு கடுமையாக நோய்வாய்ப்பட்டார்கள் என்றால் அன்னாருக்கு மயக்க நிலை ஏற்பட்டது. அவருடைய துணைவியார் ஓவென அழுது விட்டார்கள். அதாவது மிக மோசமான நிலையில் இருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு அதன்பிறகு உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. உடல்நலம் பெற்றபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள்கூறினார்கள்: நான் மயக்க நிலையில் இருந்தபோது கண்டது என்னவென்றால், இருவர் என்னிடத்தில் வந்தார்கள். மிகைத்தவனும் அமீனுமாகிய இறைவனுக்கு முன்னால் உம்முடைய தீர்ப்பை வாங்குவதற்காக செல்லலாம் என்று கூறினார்கள்.

அப்போது மூன்றாவது ஒரு நபர் அந்த இருவரையும் சந்தித்தார். அவர் கூறினார். நீங்கள் இவரை அழைத்துச் செல்ல வேண்டாம். ஏனென்றால் இவர் தனது தாயினுடைய வயிற்றிலேயே நற்பேறு பெற்றவராக இருக்கின்றார் என்றார்கள். இந்த காட்சி ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் தமக்குக் குறித்து கண்டுள்ளார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 291 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நவ்ஃபில் பின் அயாஸ் ஃபஸ்லீ என்பவர் கூறுகின்றார்; ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் எங்களது சபையில் வந்து அமர்வார்கள். அவர்கள் மிகச்சிறந்த தோழர் ஆவார்கள். ஒரு நாள் அவர்கள் எங்களை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் குளித்துவிட்டு வெளியே வந்தார்கள்.

எங்களிடத்தில் ஒரு பாத்திரம் கொண்டு வந்தார்கள். அதில் ரொட்டியும் இறைச்சியும் இருந்தது. பிறகு என்ன காரணமோ அவர்கள் அழத் தொடங்கினார்கள். அபூ முஹம்மதே! நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? என்று நாங்கள் கேட்டோம்.

அதற்கு அவர்கள், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த உலகை விட்டு எந்நிலையில் சென்றார்கள் என்றால் அன்னார் மற்றும் அன்னாருடைய குடும்பத்திற்கு வயிறு நிரம்ப ரொட்டி கிடைத்தது கிடையாது. அதாவது ரொட்டியும் முழுமையாக கிடைத்தது இல்லை.

பிறகு கூறினார்கள்: எந்த விஷயத்துக்காக நாங்கள் தாமதம் செய்யப்பட்டுள்ளோமோ அது எங்களுக்கு சிறந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 291 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது, இத்தனை காலம் உயிர் வாழ்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இது எங்களுக்கு சிறந்ததா அல்லது ஏதேனும் சோதனையா என்று தெரியவில்லை என்று கூறினார்கள்.

இதுதான் சஹாபாக்களுடைய இறையச்சத்தின் உணர்வுகள். நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாருடைய குடும்பத்தினருக்காக வெளிப்பட்ட உணர்வுகளாகும். இந்த உணர்வுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாருடைய குடும்பத்தினருக்காக மட்டும் இருக்கவில்லை. மாறாக பரஸ்பரம் சஹாபாக்களுக்கிடையிலும் இந்த உணர்வு வெளிப்பட்டது. இந்த நேசம் ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தது.

இதேபோன்று அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுடைய ஒரு சம்பவம் வருகிறது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடத்தில் ஒரு நாள் நோன்பு திறப்பதற்காக உணவு கொண்டு வரப்பட்டது. பல விதமான உணவுகள் உணவு விரிப்பை அலங்கரித்துக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஒரு கவளம் எடுத்து உண்டார்கள். அந்த உணவு வாயில் போட்ட உடனேயே உணர்ச்சிமிகுதியால் அழத்தொடங்கினார்கள். இவ்வாறு கூறியவாறு உணவை விட்டு கையை எடுத்து விட்டார்கள்.

அதாவது முஸ்அப் பின் உமைர் அவர்கள் போரில் ஷஹீதானார்கள். அவர் எம்மை விட சிறந்தவராக இருந்தார். அவரது போர்வையை கஃபனாக அணிவிக்கப்பட்டது. அதாவது கஃபனுக்காக துணி இல்லை. அவர்கள் அணிந்திருந்த அந்த போர்வையை அவர்கள் மீது கஃபனாக அணிவிக்கப்பட்டது. அந்த கஃபனின் நிலை எவ்வாறு இருந்ததென்றால் கால்களை மூடினால் தலை தெரிந்தது. தலையை மூடினால் கால்கள் தெரிந்தன.

பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸாவும் என்னை விட சிறந்தவராக இருந்தார். ஆனால் உங்களுக்கு இந்த செல்வச் செழிப்பும், உலக சுக போகங்களும் கிடைத்துள்ளன. எங்களுடைய நன்மைக்கான கூலி வெகுவிரைவிலேயே இந்த உலகத்தில் எங்களுக்கு கிடைத்து விட்டதோ! என்ற அச்சம் எனக்கு உள்ளது. இதன் பிறகு அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். உணவு உண்பதை விட்டுவிட்டார்கள். இதுதான் அல்லாஹ்வின் மீதான அச்சத்தின் நிலையாக இருந்தது!

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 111,112)

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு சல்மா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்களிடத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் வந்தார்கள். எனது அன்னையே! செல்வச் செழிப்பு என்னை நாசமாக்கி விடக்கூடாது என நான் அஞ்சுகிறேன். ஏனென்றால் குரைஷிகளிலேயே அதிக செல்வந்தனாக நான் உள்ளேன் என்று கூறினார்கள். அதாவது அல்லாஹ்வுடைய வழியில் செலவழியுங்கள். அப்போது எந்த வித நாசத்திற்கான கேள்வியும் அங்கு இல்லை. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். எனது சில தோழர்கள் எப்படி இருப்பார்கள் என்றால் அவர்களைவிட்டு நான் பிரிந்து சென்ற பிறகு அவர்கள் மறுபடியும் என்னை காண மாட்டார்கள். அதாவது அந்த அந்தஸ்தை அவர்கள் அடைய மாட்டார்கள்.

அவ்வாறு சிலர் இருப்பார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் வெளியேறிச் சென்றார்கள். வழியில் ஹஸ்ரத் உமர் அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களிடத்தில் இந்த விஷயத்தை கூறினார்கள். அவர்கள் உம்மு சல்மா அவர்களிடத்தில் வந்தார்கள். நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உங்களிடம் கேட்கிறேன். நீங்கள் கூறிய அம்மக்களில் நான் இருக்கின்றேனா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை சந்திக்க மாட்டார்கள் என்று கூறிய, தம்மை மீண்டும் காணமாட்டார்கள் என்று கூறிய மக்களுள் நான் உள்ளேனா? என்று கேட்டார்கள்.

உம்மு சல்மா அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களைப் பார்த்து, தாங்கள் இந்த மக்களில் இல்லை என்று கூறினார்கள். ஆனால் உங்களுக்குப் பிறகு வேறு எவரையாவது குறித்து அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காண்பார்களா இல்லையா? என்று என்னால் உறுதியாக கூற முடியாது என்று கூறினார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 848,849 – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சரிடக்கப்பட்டது)

இங்கு இன்னொரு விஷயமும் தெளிவாக்க வேண்டியது அவசியமாகும். அதாவது ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் சொர்க்கத்திற்குரியவர்கள் என்று நற்செய்தி வழங்கப்பட்ட 10 நபர்களில் ஒருவராக இருந்தார்கள். அப்படி இருந்தபோதிலும் இவர்களிடத்தில் இறையச்சம் எந்த அளவு இருந்தது என்றால் ஹஸ்ரத் உம்மு சல்மா அவர்களுடைய கூற்றை கேட்டுவிட்டு உடனடியாக அதிகமாக தான தருமங்கள் செய்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறுகிறார்கள்: உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் சிரியா நாட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். சர்ஃக் எனும் இடத்தை அடைந்தார்கள். சர்ஃக் என்பது சிரியா மற்றும் ஹிஜாஸின் எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய தபூக் பள்ளத்தாக்கின் ஒரு ஊராகும். மதீனாவிலிருந்து 13 நாட்கள் பயண தொலைவில் அது உள்ளது. அதாவது அப்போது இருந்த வாகனத்தில் தொடர்ச்சியாக 13 நாட்கள் பயணம் மேற்கொண்டால் இந்த இடத்தை அடையலாம். ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் இந்த சம்பவம் நடந்தது. படைத் தளபதியான அபூ உபைதா பின் அல்ஜராஹ் (ரலி) அவர்களும் அவர்களின் நண்பர்களும் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்து சிரியா நாட்டில் கொள்ளைநோய் பரவியுள்ளது என்று தெரிவித்தார்கள்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், ஆரம்பக் கால முஹாஜிர்களை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று சொல்ல அவர்களை நான் உமர் (ரலி) அவர்களிடம் அழைத்து வந்தேன். அவர்களிடம் சிரியா நாட்டில் கொள்ளைநோள் பரவியுள்ளது என்று தெரிவித்து (அங்கு போகலாமா? மதீனாவுக்கே திரும்பிச் சென்று விடலாமா? என்) ஆலோசனை கேட்டார்கள். இது தொடர்பாக முஹாஜிர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

அவர்களில் சிலர், நாம் ஒரு நோக்கத்திற்காகப் புறப்பட்டு விட்டோம். அதிலிருந்து பின்தங்குவதை நாங்கள் பொருத்தமாகக்

கருதவில்லை என்று கூறினார்கள். வேறு சிலர், உங்களுடன் மற்ற மக்களும் நபித்தோழர்களும் உள்ளனர். அவர்களையெல்லாம் இந்தக் கொள்ளைநோயில் தள்ளிவிடுவதை நாங்கள் சரியென்று கருதவில்லை என்று கூறினார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், நீங்கள் போகலாம் என்று சொல்லிவிட்டுப் பிறகு, என்னிடம் (மதீனாவாசிகளை) அன்ஸாரிகளை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். எனவே நான் அவர்களை அழைத்து வந்தேன். அவர்களிடம் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை செய்தார்கள். அவர்களும் முஹாஜிர்களின் வழியிலேயே சென்று அவர்களைக் போன்றே கருத்து வேறுபட்டார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், நீங்கள் போகலாம் என்று சொல்லிவிட்டுப் பிறகு, மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டில் (மதீனாவுக்கு) ஹிஜ்ரத் செய்து வந்த குரைஷிப் பெரியவர்களில் இங்கு உள்ளவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள் என்று சொல்ல நான் அவர்களை அழைத்து வந்தேன். அவர்களில் எவருக்கிடையேயும் கருத்து வேறுபாடு எழவில்லை. அவர்கள் (அனைவரும்) மக்களுடன் நீங்கள் திரும்பி விட வேண்டும்; அவர்களை இந்தக் கொள்ளைநோயில் தள்ளிவிடக்கூடாது என்று கருதுகிறோம் என்றனர்.

எனவே உமர் (ரலி) அவர்கள் மக்களிடையே, நான் காலையில் (என்) வாகனத்தில் (மதீனா) புறப்படவிருக்கிறேன்; நீங்களும் வாகனத்தில் புறப்படுங்கள் என்று அறிவித்தார்கள். அப்போது உபூ உபைதா இப்னு அல் ஜராஹ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் விதியிலிருந்து வெருண்டோடுவதற்காகவா (ஊர் திரும்புகிறீர்கள்)? என்று கேட்க, உமர் (ரலி) அவர்கள், உபூ உபைதா! இதை உங்களைத் தவிர வேறெவரேனும் சொல்லியிருந்தால் நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். ஆம் நான் அல்லாஹ்வின் ஒரு விதியிலிருந்து இன்னொரு விதியின் பக்கமே வெருண்டோடுகிறோம். உங்களிடம் ஓர் ஒட்டகம் இருந்து, அது ஒரு பக்கம் செழிப்பானதாகவும், மறுபக்கம் வறண்டதாகவும் உள்ள இரண்டு கரைகள் கொண்ட ஒரு பள்ளத்தாக்கில் இறங்கிவிட்டால், செழிப்பான கரையில் நீங்கள் அதை மேய்த்தாலும் அல்லாஹ்வின் விதிப்படிதான் அதை நீங்கள் மேய்க்கிறீர்கள். வறண்ட கரையில் அதை நீங்கள் மேய்த்தாலும் அல்லாஹ்வின் விதிப்படிதான் நீங்கள் மேய்க்கிறீர்கள் அல்லவா? என்று கேட்டார்கள்.

அதாவது அல்லாஹ்வின் விதி இரண்டு Option களை உங்களுக்கு முன்னால் வைத்துள்ளது. செழிப்பான மேய்ச்சல் பகுதி, மற்றொன்று முற்றிலும் காய்ந்த பகுதி. அது வறண்டு போய் உள்ளது. ஓரிரு புதர்கள் உள்ளன. அல்லது மிகக் குறைவான புற்கள் உள்ளன. பசுமையான இப்பகுதி இறை விதியால் முளைத்தது என்றும் காய்ந்து போன பகுதி வேறொரு விதியால் உள்ளது என்றும் நீங்கள் கூறுவீர்களா? இந்த இரண்டும் இறை விதிகளாகும். எந்த சிறந்ததை எடுக்க வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். ஹஸ்ரத் உமர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் வந்து விட்டார்கள்.

தம் தேவையொன்றுக்காக வெளியே சென்றிருந்த ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அங்கு வந்தார்கள். அவர்கள், இது தொடர்பாக என்னிடம் ஒரு விளக்கம் உள்ளது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ஓர் ஊரில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்களாகச் செல்லாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும்போது அங்கு கொள்ளைநோய் பரவினால் அதிலிருந்து வெருண்டோடுவதற்காக (அவ்வூரைவிட்டு) வெளியேறாதீர்கள் என்று சொல்ல கேட்டேன் என்று கூறினார்கள். உடனே உமர் (ரலி) அவர்கள் (தம் முடிவு நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்பவே அமைந்திடச் செய்வதற்காக) அல்லாஹ்வைப் புகழ்ந்துவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

தற்போது ஊரடங்கில் உலகம் இதன்படி செயல்படுகின்றது. தகுந்த நேரத்தில் இதை மேற்கொண்டவர்கள் போதுமான அளவுக்கு இதைக் கட்டுப்படுத்தி விட்டார்கள். இந்த நோயை Contain செய்து விட்டார்கள். ஆனால் எவர்கள் இவ்வாறு செய்ய முடியவில்லையோ, அக்கறையின்றி இருந்தார்களோ அங்கு பரவிக் கொண்டே செல்கிறது. எப்படி இருந்தபோதிலும் இந்த அடிப்படை விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலேயே தமது சஹாபாக்களுக்கு கூறி விட்டார்கள். இதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். திரும்பிச் சென்று விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் திப்.... ஹதீஸ் எண் 5729)

ஹஸ்ரத் மிஸ்வர் பின் மக்ரமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் கத்தாப் அவர்கள் நல்ல நிலையில் இருக்கும்போது உங்களுக்குப் பின்னால் ஒருவரை கலீஃபாவாக நியமியுங்கள் என்று விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் மறுத்து வந்தார்கள். பிறகு ஒரு நாள் அவர்கள் மிம்பரில் ஏறி நின்று சில விஷயங்கள் கூறினார்கள். மேலும் நான் இறந்துவிட்டால் உங்களுடைய விவகாரம் இந்த ஆறு நபர்களுடைய பொறுப்பில் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு செல்லும்போது இவர்கள் மீது திருப்தி கொண்டிருக்கும் நிலையில் சென்றார்கள்.

ஹஸ்ரத் அலீ பின் அபூதாலிப்; இவருக்கு ஒப்பான ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், இவருக்கு ஒப்பான ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான், மேலும் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ், இவருக்கு ஒப்பான ஹஸ்ரத் சஅது பின் மாலிக் ஆவார்கள் என்று கூறினார்கள்.

நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். தீர்ப்பு வழங்கும் விஷயத்தில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்றும் நீதியுடன் நடந்து கொள்ளுமாறும் நான் உங்களுக்கு கட்டளையிடுகிறேன்.

ஹஸ்ரத் அபூ ஜஃபர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஆலோசனைக் குழுவினருடன் கூறினார்கள். உங்களது விவகாரத்தை பரஸ்பரம் ஆலோசனை செய்து கொள்ளுங்கள். இருவர் இருவராக இருப்பீர்கள் என்றால் பிறகு மறுபடியும் ஆலோசனை செய்யுங்கள். நால்வர் மற்றும் இருவராக இருப்பீர்கள் என்றால் பெரும்பான்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஸைது பின் அஸ்லம் அவர்கள் தமது தந்தையிடம் இருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: மூன்று பேருடைய கருத்தும் இன்னொரு மூன்று பேருடைய கருத்தும் ஒத்துப் போய்விட்டால் எந்தப் பக்கத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் இருப்பார்களோ அந்த குழுவினுடைய விஷயத்தை கேளுங்கள்; அதற்கு கட்டுப்படுங்கள்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

அவனிடமே நீங்கள் எல்லாரும் திரும்பிச் செல்ல வேண்டியது உள்ளது. அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. (10:5)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அப்துர் ரஹ்மான் பின் சயீது அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் காயமுற்றபோது அன்னார் ஸுஹைப் அவர்களிடத்தில் நீங்கள் மக்களுக்கு தொழ வையுங்கள் என்று கூறினார்கள். அதாவது அவர்களை தொழுகைக்கு இமாமாக நியமித்தார்கள். இந்த விஷயத்தை மூன்று முறை கூறினார்கள். உங்களது விவகாரத்தில் ஆலோசனை செய்யுங்கள். மேலும் இந்த விவகாரம் ஆறு நபர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவர் உங்களுடைய கட்டளையை நிராகரிப்பாரோ அதாவது உங்களை எதிர்ப்பாரோ அவரது தலையை வெட்டி வீழ்த்தி விடுங்கள் என்று கூறினார்கள்.

அடுத்த விஷயம் என்னவென்றால், கிலாஃபத்தை தேர்ந்தெடுக்கக்கூடிய பணி இந்த ஆறு நபர்கள் மீது உள்ளது. அப்பொழுது வரை ஸுஹைப் அவர்கள் தொழுகைக்காக இமாமாக இருப்பார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கின்றார்கள்: உமர் அவர்கள் தனது மரணத்திற்கு கொஞ்சம் காலத்திற்கு முன்பு அபூ தல்ஹா அவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். அதாவது நீங்கள் உங்களது அன்ஸார் சமுதாயத்திலிருந்து 50 நபர்களை அழைத்துக் கொண்டு ஆலோசனை கூடத்தில் சென்று விடுங்கள். அவர்கள் தங்களுக்குள் ஒருவரை அமீராக நியமிக்காத வரை மூன்று நாட்கள் வரை அவர்களை நீங்கள் விட்டு விடாதீர்கள். அல்லாஹ்வே! நீ அவர்களுக்கு எனது பிரதிநிதியாக இருக்கின்றாய் என்று கூறினார்கள்.

இஸ்ஹாக் பின் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூதல்ஹா அவர்கள் தமது தோழர்களுடன் கொஞ்ச நேரம் வரை ஹஸ்ரத் உமர் அவர்களின் கபரில் நின்று கொண்டிருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் ஆலோசனைக்குழு உறுப்பினர்களுடன் இருந்தார்கள். பிறகு ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் தமது விவகாரத்தை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடத்தில் ஒப்படைத்து அவர் யாரை வேண்டுமானாலும் அமீராக தேர்ந்தெடுக்க அதிகாரத்தை கொடுத்தபோது, உஸ்மான் அவர்களிடம் பைஅத் செய்யப்படாத வரை ஹஸ்ரத் அபூதல்ஹா அவர்கள் தமது தோழர்களுடன் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுடைய வாசலில் நின்று கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் சல்மா பின் அபூ சல்மா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் முதலில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடத்தில் பைஅத் செய்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அலி அவர்கள் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான உமர் பின் உமைரா அவர்கள் தனது பாட்டனாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள். எல்லோரையும் விட முதலில் ஹஸ்ரத் அலி அவர்கள் பைஅத் செய்தார்கள். அதன் பிறகு மற்ற மக்கள் அனைவரும் பைஅத் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 44–46... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

புகாரியில் இவ்வாறான ஓர் அறிவிப்பும் உள்ளது. உமர் அவர்கள் தொழுகையை ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லாஹு அக்பர் என்று கூறி நின்றபோது அவர் மீது கொலை தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்த நிலையில் ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை தமக்கு அருகில் அவர்களுடைய கையை பிடித்து இழுத்து இமாமத் செய்வதற்கு முன்னால் நிறுத்தினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் சுருக்கமாக தொழ வைத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்).... ஹதீஸ் எண் 3700)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான்அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் பங்களிப்பை பற்றி கூறியவாறு கூறுகின்றார்கள்:

அதாவது முதலில் உள்ள இரண்டு அறிவிப்புகளிலும் ஒரே ஒரு இடத்தில்தான் வேறுபாடு காணப்படுகிறது. மற்ற அனைத்து சம்பவங்களும் அப்படியே இருக்கின்றன. எப்படி இருந்தபோதிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் அவர்கள் காயமுற்றபோது தமது இறுதி நேரம் நெருங்கிவிட்டது என்று அவர்கள் உணர்ந்தபோது, ஆறு நபர்களை குறித்து தனது இறுதி விருப்பத்தைக் கூறினார்கள். அதாவது அந்த ஆறு நபர்கள் தங்களுக்குள் ஒருவரை கலீஃபாவாக தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறினார்கள்.

அந்த ஆறு நபர்கள் யாரென்றால், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅது பின் வகாஸ், ஹஸ்ரத் ஸுபைர் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா ஆகியோர் ஆவார்கள். இவர்களுடன் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களையும் ஆலோசனைக்காக இணைத்துக் கொள்ளுமாறு கூறினார்கள். ஆனால் கிலாஃபத்தில் அவர் உரிமை உடையவராக இருக்க மாட்டார் என்று வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் மூன்று நாட்களுக்குள் முடிவு எடுப்பார்கள்.

அந்த மூன்று நாட்கள் ஹஸ்ரத் ஸுஹைப் அவர்கள் தொழுகைக்கு இமாமாக நியமிக்கப்பட்டார்கள். ஆலோசனைக் குழுவை கண்காணிப்பதற்காக மிக்தாத் பின் அஸ்வது அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல் என்னவென்றால், அவர்கள் இந்த அனைவரையும் ஓரிடத்தில் ஒன்றுகூட்டி தீர்மானம் எடுப்பதற்காக அவர்களை நிர்பந்திப்பார்கள். மேலும் அவர்கள் வாளேந்தி வாயிலில் காவல் நிற்பார்கள்.

இதற்கு முந்தைய அறிவிப்புகளில் ஹஸ்ரத் தல்ஹா அவர்களுடைய பெயர் கூறப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து அவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையில் மிக்தாது பின் அஸ்வது அவர்களிடத்தில் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதாவது கலீஃபாவை தேர்ந்தெடுக்கும் வரை அவர் காவல் நிற்பார்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: எவரைக் குறித்து பெரும்பான்மையானவர்கள் ஒன்றுபடுகின்றார்களோ அவரிடம் நீங்கள் பைஅத் செய்யுங்கள். யாராவது அதை நிரகாரித்தால் அவரை கொன்று விடுங்கள். மூன்று மூன்று நபராக இரண்டு அணிகளாக பிரிந்து விட்டால் பிறகு அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்களை கலீஃபாவாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும், வானங்கள் பூமி ஆகியவற்றுள் அல்லாஹ் படைத்திருப்பதிலும், இறையச்சம் உடைய மக்களுக்கு உறுதியான அடையாளங்கள் இருக்கின்றன. (10:7)

A.Basheer Ahmad, Melapalayam

ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த தீர்ப்பில் திருப்தி ஏற்படவில்லை என்றால் எந்தப் பக்கம் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் இருப்பார்களோ அவர் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதனடிப்படையில் ஐந்து நபர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்தார்கள். ஏனென்றால் அப்போது ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் அந்நேரத்தில் மதீனாவில் இல்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடன் கூற்றிற்கிணங்க தல்ஹா அவர்கள் மதீனாவில் இல்லை. அந்த 5 நபர்களால் எவ்வித தீர்மானத்திற்கும் வர இயலவில்லை. மிக நீண்ட விவாதம் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் எவர் தனது பெயரை எடுக்க விரும்புகிறாரோ அவர் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். எல்லோரும் அமைதியாக இருப்பதை பார்த்து அவர்கள் நான் முதலில் எனது பெயரை விடுவித்துக் கொள்கிறேன்; பின் வாங்குகிறேன் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் உஸ்மான் அவர்களும் கூறினார்கள். மேலும் இருவரும் அவ்வாறே கூறினார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள் அமைதியாகஇருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களிடத்தில் ஓர் உறுதிமொழி வாங்கப்பட்டது. அதாவது முடிவு செய்வதில் எந்த பாரபட்சமும் காட்ட மாட்டார் என்று உறுதிமொழி வாங்கப்பட்டது. அவ்வாறே அவர் உறுதிமொழி வாங்கினார்.

இதன் அடிப்படையில் எல்லா வேலையும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் பொறுப்பில் விடப்பட்டது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் மூன்று நாட்கள் வரை மதீனாவில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றார்கள். ஆண்கள் பெண்களை சந்தித்து அவர்களுடைய கருத்தை கேட்டறிந்தார்கள். அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத்திற்கு இணக்கம் கொண்டார்கள். ஆகவே அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் ஹக்கில் தனது தீர்ப்பை கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கலீஃபாவாக ஆனார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 484,485)

இது குறித்த இன்னொரு அறிவிப்பும் உள்ளது. அது மிக நீண்ட அறிவிப்பாகும். ஆகவே மீதமுள்ள பகுதி இன்ஷா அல்லாஹ் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது கூறப்படும். அதன் தேவை இருப்பின் பிறகு இன்ஷா அல்லாஹ் அது தனியாக கூறப்படும். அந்த நீண்ட அறிவிப்பு உஸ்மான் அவர்களின் கிலாஃபத் தொடர்பான தலைப்பில் உள்ளது என நினைக்கிறேன். அல்லது ஹஸ்ரத் உமர் அவர்களுடைய வாழ்க்கை சம்பவத்திலோ உள்ளது. அங்கேயும் அதைக்குறித்து கூறலாம்தான்.

எவ்வாறிருப்பினும் இதற்குப் பிறகும் அவர்களுடைய வாழ்க்கை சம்பவங்கள் கொஞ்சம் மீதமிருக்கிறது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுடைய வாழ்க்கை சம்பவங்கள், அவர்களுடைய நன்மைகள், அவர்களுடைய வரலாறு இன்னும் உள்ளது. இன்ஷா அல்லாஹ் வருங்காலத்தில் குத்பாவில் அவை கூறப்படும்.

......☆......☆......☆......

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“நினைவில் கொள்ளுங்கள். எந்த நபர் இறங்க வேண்டியதிருந்ததோ அவர் குறித்த நேரத்தில் இறங்கி விட்டார். வேதங்களில் எழுதப்பட்டுள்ள அனைத்து விஷயங்களும் இன்று முழுமையடைந்து விட்டன. அனைத்து நபிமார்களின் புத்தகங்களும் இந்த காலம் பற்றிய ஆதாரத்தையே தருகின்றன. இந்த காலத்தில்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை அவசியமாகும் என்பது கிறிஸ்தவர்களின் கொள்கையாகும். அவர்களது நூல்களில் தெளிவாக, ஆதமிற்குப் பிறகு ஆறாயிரம் வருடத்தின் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவார் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. எனவே ஆறாயிரம் வருடத்தின் இறுதியும் வந்து விட்டது.”

மேலும் எழுதப்பட்டுள்ளது: “அதாவது அதற்கு முன்பாக வால் நட்சத்திரம் வெளிப்படும். எனவே அது வெளிப்பட்டும் பல காலங்கள் கழிந்து விட்டன. மேலும், அந்த நாட்களில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ரமலான் மாதத்தில் கிரகணம் ஏற்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பும் முழுமையாகி விட்டது. மேலும் அவரது காலத்தில் பிளேக் நோய் ஏற்படும். இது பற்றிய குறிப்பு இஞ்சீலிலும் இருக்கின்றது. எனவே பிளேக் நோய் தற்போது வரை நம்மைப் பின்தொடர்வதை விடவில்லை என்பதைப் பார்க்கின்றேன்.

மேலும் திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் முந்தைய நூல்களில், அவரது காலத்தில் ஒரு புதிய வாகனம் உருவாக்கப்பட்டு அது நெருப்பினால் இயங்கும். மேலும் அந்த நாட்களில் ஒட்டகம் கைவிடப்படும் என்றும் எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியிலுள்ள இந்த நபிமொழிகள் சஹீஹ் புகாரியிலும், முஸ்லிமிலும் இருக்கின்றன. ஆகவே அந்த வாகனம் ரயில் ஆகும். அது வெளிப்பட்டு விட்டது.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றுவார் என்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே நூற்றாண்டின் 21 வருடங்களும் கடந்து விட்டன. எனவே இந்த அனைத்து அடையாளங்களுக்குப் பிறகும் எவர் என்னை நிராகரிப்பாரோ அவர் என்னை அல்ல; மாறாக, அனைத்து நபிமார்களையும் நிராகரிக்கின்றார். மேலும் அவர் இறைவனோடு சண்டையிடுகின்றார். அவர் பிறக்கமால் இருந்திருந்தால் அது அவருக்கு சிறந்ததாக இருந்திருக்கும்.”

(தஸ்கரத்துஷ் ஷஹாததைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 24)

## வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக இருப்பார்

● اَلَا اِنَّ عِیْسَی بْنَ مَرْیَمَ لَیْسَ بَیْنِیْ وَبَیْنَہٗ نَبِیٌّ وَلَا رَسُوْلٌ، اَلَا اِنَّہٗ خَلِیْفَتِیْ فِیْ اُمَّتِیْ مِنْ بَعْدِیْ ، اَلَا اِنَّہٗ یَقْتُلُ الدَّجَّالَ وَیَکْسِرُ الصَّلِیْبَ وَیَضَعُ الْجِزْیَۃَ، وَتَضَعُ الْحَرْبُ اَوْزَارَھَا اَلَا مَنْ اَدْرَکَہٗ فَلْیَقْرَأْ عَلَیْہِ السَّلَامَ ۔

ஈஸப்னு மர்யத்திற்கும் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) எனக்கும் இடையில் எந்த நபியோ ரஸூலோ கிடையாது. நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அவர் எனக்குப் பிறகு எனது உம்மத்தில் கலீஃபாவாக இருப்பார். நிச்சயமாக அவர் தஜ்ஜாலை கொலை செய்வார். சிலுவையை (அதாவது சிலுவைக் கொள்கைளை) முறிப்பார். ஜிஸ்யாவை முடிவுக்கு கொண்டு வருவார்.

(அதாவது அந்த நடைமுறை இருக்காது. ஏனென்றால்) அந்த நேரத்தில் (மார்க்கப்) போர்கள் முடிவுக்கு வரும். நினைவில் கொள்ளுங்கள். எவருக்கு அவரை சந்திப்பதற்கான பாக்கியம் கிடைக்குமோ அவர் எனது ஸலாத்தை அவருக்குக் கண்டிப்பாக எட்ட வைக்கவும். (திப்ரானி அல் அவ்ஸத்துஸ் ஸகீர்)

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்பவர்களுக்கு, அவர்களின் இறைவன் அவர்களது நம்பிக்கையின் காரணமாக (வெற்றிக்குரிய) வழியினைக் காட்டுவான். அருட்குரிய சுவர்க்கங்களில், அவர்களின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். (10:10)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 23 July 2020 Issue No. 30

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**கலப்பற்ற ஜமாஅத் மக்களின் கவனத்திற்கு**

நீங்கள் அறிந்ததுபோன்று தஹ்ரீகே ஜதீது வாக்குறுதி ஆண்டு 1 நவம்பரில் ஆரம்பமாகி 31 அக்டோபரில் நிறைவடைகின்றது. இதன் அடிப்படையில் 30 ஜூன் 2020 வரை வரை நடப்பு ஆண்டின் 8 மாதங்கள் கடந்துவிட்டன. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தரப்பிலிருந்து செய்யப்பட்ட தஹ்ரீகே ஜதீதின் 86 வது ஆண்டின் அருளுக்குரிய அறிவிப்பை உள்ளடக்கிய 8 நவம்பர் 2019 ன் ஜுமுஆ பேருரையை செயல்படுத்தும் விதமாக ஜமாஅத் உறுப்பினர்கள் அல்லாஹ்வின் அருளால் நடப்பாண்டில் தங்களின் வாக்குறுதிகளை மனமுவந்து அதிகப்படுத்தியுள்ளனர். ஆனால் 8 மாத காலம் கடந்த பிறகும் கூட சில ஜமாஅத்துகளில் வாக்குறுதிகளை ஒப்பிடும்போதும் மிகவும் குறைவாகவே வசூலாகியுள்ளது. இது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

தஹ்ரீகே ஜதீது சந்தாவை விரைவாக செலுத்துவது தொடர்பாக தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளது என்னவென்றால்,

''விரைவாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்துவதற்கு ஜமாஅத் உறுப்பினர்கள் மக்கள் முயற்சி செய்ய வேண்டும். அதனை செலுத்துவதற்கு ஆண்டின் இறுதிவரை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. ஒரு நாளின் நற்கூலி கூட சாதாரணமானது இல்லை. எனவே அதனை விட்டுவிடக்கூடாது''. (12 பிப்ரவரி 1936 ஆம் ஆண்டு ஆலோசனைக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

சந்தா தஹ்ரீகே ஜதீதின் பெரும்பான்மையான செலவீனங்களின் தொடர்பு முழு உலகிலும் தப்லீக் பணிகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. எனவே ஹுஸூர் அவர்கள் தஹ்ரீகே ஜதீத் செயலாளர்களுக்கும் அறிவுறுத்திக் கூறியுள்ளது என்னவென்றால்,

''தஹ்ரீகே ஜதீதிற்கு தனது பணிகளுக்காக உடனடி பணத்தேவை உள்ளது. செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுவது என்னவென்றால், பணத்தை சேர்த்து வைத்துக் கொண்டிருக்காமல் உடனுக்குடன் பினான்ஷியல் செயலரின் (வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீத்) பெயருக்கு அனுப்பி கொண்டிருங்கள்''. (கிதாப் மாலி குர்பானியா பக்கம் 34)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 5 டிசம்பர் 1952 ஆம் ஆண்டு குத்பா பேருரையில் கூறினார்கள்:

''...எனவே தஹ்ரீகே ஜதீத் அல்லாஹ்வின் அருள் மற்றும் பரக்கத்தினால் வந்துள்ளது. மேலும் ஒவ்வொரு நபரும் இதில் பங்கு பெற முயற்சி செய்ய வேண்டும். நான் கடந்த முறை கூறியிருந்தேன். அதாவது இது பஞ்சத்தின் காலமாகும். துன்பங்கள் மற்றும் துயரங்களின் காலமாகும். ஆனால் எவ்வாறு ஒரு தாய் தன்னை பசியோடு வைத்துக் கொள்கின்றாள். ஆனால் தனது பிள்ளைகளுக்கு பசி ஏற்பட விட்டுவிடுவதில்லையோ அதேபோன்று நீங்களும் மார்க்கத்தை தாயைப் போன்று நேசியுங்கள். நீங்கள் சுயமே பசியுடன் இருங்கள். ஆனால் மார்க்கப் பணிகளில் சோர்வு ஏற்பட விட்டுவிடாதீர்கள்''.

ஏனைய மாவட்ட/உள்ளூர் அமீர்/சத்ர்மார்கள் மற்றும் தஹ்ரீகே ஜதீதின் செயலர்கள் ஆகியோர்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அவர்கள் தத்தமது ஜமாஅத்துகளின் பட்ஜெட்டை ஆய்வு செய்து

கலப்பற்ற ஜமாஅத் மக்களின் வாக்குறுதிகளை 100 சதவீத வசூல் செய்வது தொடர்பாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். மேலும் தஹ்ரீகே ஜதீதின் இன்ஸ்பெக்டர்களுடன் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியவாறு ஹுஸூர் அவர்களின் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய துஆக்களிலிருந்து பெரும் பங்கை பெற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை பெறவும்.

அல்லாஹ் உங்களின் அனைத்து முயற்சிகளுக்கும் ஏற்றுக் கொள்ளும் தகுதியை வழங்குவானாக. அனைத்து கலப்பற்ற ஜமாத்தினர்களுக்கும் அசாதாரணமான பரக்கத்தை வழங்குவானாக. மேலும் அவர்களுக்கு தனது பாதுகாப்பு, அருள்கள் மற்றும் பரக்கத்துகளை வழங்குவானாக.

இன்றைய நாட்களில் கொரோனா வைரஸின் தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவியுள்ளது. அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளையும் அதிலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் அனைத்துலக மக்களையும் இறைவனின் பக்கம் குனிந்தவாறு இறைவணக்கங்களை செலுத்துவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம் எளியவன்
வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது காதியான்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும் குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மவுனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தலுடன் தனது முகத்தைக் காட்டுவான். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை கேட்கக்கூடிய காதுகள் கேட்டுக் கொள்ளட்டும். இறைவனின் பாதுகாப்பின் கீழ் அனைவரையும் கொண்டு வர வேண்டும் என நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதியில் எழுதப்பட்டது நிறைவேறுவது அவசியமானதாக இருந்தது. இந்த (இந்திய) நாட்டிற்கான முறையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என நான் உண்மையாகவே கூறுகிறேன்.

நூஹின் காலம் உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து விடும். மேலும் லூத்தின் நாட்டில் நடந்த சம்பவத்தை உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். ஆனால், இறைவன் கோபத்தை காட்டுவதில் நிதானமானவனாக இருக்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் பாவமன்னிப்புத் தேடுங்கள். எவர் இறைவனை விட்டு விடுன்றாரோ அவர் ஒரு கிருமியாவார்; மனிதர் அல்ல. யார் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருடன் இருப்பவர் அல்ல.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 265)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad